அரசாங்க நிருவாக சுற்றறிக்கை
இல: 23/98

எனது இல : IX/TU/23/6
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07.
1998.09. 24 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்கள தலைவர்கள் யாவருக்கும்.

**அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்க சம்மேளனங்கள் நடாத்தப்படுகின்ற அலுவலகங்களுக்கும் தொழிற்சங்கங்கள் நடாத்தப்படுகின்ற அலுவலகங்ளுக்கும் மற்றும் அந்த சம்மேளனங்களின் சங்கங்களின் கௌரவ தலைவர்கள் கௌரவ செயலாளர்கள் ஆகியோர்களுக்காக அரசினால் தொலைபேசி வசதிகளை வழங்குதல்.**

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்க சம்மேளனங்கள் மற்றும் 5000 மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட தொழிற்சங்க அலுவலகங்களுக்கும் 5000 மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட தொழிற்சங்கங்கள்/ சம்மேளனங்களில் கௌரவ தலைவர்கள் கௌரவ செயலாளர்கள் ஆகியோரின் வீடுகளுக்கும் அவர்கள் தமது உத்தியோகபூர்வ பதவியை வகிக்கும் காலத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தொலைபேசி வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. அதன்பிரகாரம் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் தொலைபேசி வசதிகள் வழங்கப்படும்.

(1) பொருத்துவதற்கான கட்டணங்கள்:

(அ) அரசாங்க நிருவாக அமைச்சின் கீழ் வருகின்ற நடாளவிய சேவைகளிலும் இணைந்த சேவைகளிலும் கடமையில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களைக் கொண்டுள்ள தொழிற் சங்கங்கள்/சம்மேளனங்கள் தொடர்பில் அரசாங்க நிருவாக அமைச்சினாலும்.

(ஆ) மற்றைய அமைச்சுக்கள் திணைக்களங்களின் கீழ் வருகின்ற நடாளவிய மற்றும் இணைந்த சேவைகளில் கடமை புரிகின்ற அங்கத்தவர்களைக் கொண்டுள்ள தொழிற்சங்கங்கள் / சம்மேளனங்கள் தொடர்பில் அந்தந்த அமைச்சுக்கள் / திணைக்களங்களினாலும்

(இ) குறிப்பிட்ட பதவிகளுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மாறும் போது அந்தத் தொலைபேசிகளை புதிய உத்தியோகத்தர்களின்

வீடுகளுக்கு பொருத்துவராயின் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்கள் / சம்மேளனங்களினால் பொருத்துவதற்கான கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

(2) பதிவுக் கட்டணங்கள் வருடாந்த வரிப்பணம் மற்றும் மாதாந்த பில்பத்திரங்கள் ( பொருட்கள் சேவைகள் பாதுகாப்பு கட்டணங்களுடன்) சம்பந்தப்பட்ட தொழிற்சங்கள் சம்மேளனங்களுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் செலுத்தப்பட வேண்டும்.

(3) தொலைபேசி வசதிகளை வழங்குவதானது 1998.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

ஒப்பம் / பி.ஏ சேனாரட்ன
செயலாளர்
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.